# ஒரு இந்தியனின் கனவு...



## ஏ.பி.ஜே.அப்துல் கலாம்

[தமிழில் வி.எஸ்.ஜோசஃப் ராஜ்]

நர்மதா பதிப்பகம்

## மூன்று தொலைநோக்குப் பார்வைகள்...

நமது 3000 ஆண்டுக் கால வரலாற்றில், உலகிலுள்ள பல நாட்டினரும் நம் மீது படையெடுத்து வந்து, நமது அறிவுச் செல்வங்களைத் தமதாக்கிக் கொண்டார்கள்.

அவ்வாறு நம் மீது படையெடுத்தவர்களின் வரிசையில் மாவீரன் அலெக்ஸாண்டரைத் தொடர்ந்து கிரேக்கர்கள், துருக்கியர்கள், மொகலாயர்கள், போர்ச்சுகீசியர்கள் என ஒருவர் பின் ஒருவராகப் படையெடுத்து வந்து நமது விலைமதிப்பற்ற செல்வங்களைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

ஆனால், மற்ற நாடுகளிடம் நாம் இவ்வாறு நடந்துகொள்ளவில்லை. எந்த நாட்டையும் நாம் வெற்றிகொள்ளவும் இல்லை. அவர்களது நாடு, கலாசாரம், மற்றும் வரலாற்றை அபகரித்துக் கொண்டு நமது வாழ்க்கை முறைகளை அவர்கள் மீது நாம் திணிக்கவில்லை. ஏன்?

- மற்றவர்களது உரிமையை நாம் மதிப்பதுதான் இதற்குக் காரணமாகும். எனவேதான் எனது முதல் தொலைநோக்குப் பார்வை **"சுதந்திரம்"** என்கிறேன். முதல் சுதந்திரப் போரை நாம் 1857-இல்



துவக்கியபோதே இந்தியா இந்த முதல் தொலைநோக்கை அடைந்துவிட்டதாக நாம் நம்புகிறேன். இந்தச் சுதந்திரத்தை நாம் பேணிப் பாதுகாத்து, கருத்தாக வளர்த்து, கட்டிக்காக்க வேண்டும். நாம் சுதந்திரமின்றி இருந்தால் எவரும் நம்மை மதிக்க மாட்டார்கள்.

இந்தியாவுக்கான எனது இரண்டாவது தொலைநோக்குப் பார்வை **"வளர்ச்சி"** ஆகும். கடந்த ஐம்பது ஆண்டுகளாக நாம் ஒரு வளரும் நாடாகவே இருந்து வருகிறோம். இந்தியாவை **ஒரு வளர்ந்த நாடாக** நாம் பார்ப்பதற்கு இதுவே ஏற்ற தருணம்.

உலகின் மொத்த உற்பத்திப் பெருக்கத்தில், உயர்ந்த இடத்திலுள்ள 5 நாடுகளில் இந்தியாவும் ஒன்று. பெரும்பாலான துறைகளில் நாம் 10 சதவீத வளர்ச்சியை அடைந்துள்ளோம். நமது வறுமை நிலையின் அளவும் குறைந்துகொண்டே வருகிறது. இன்று உலகமெங்கும் நமது சாதனைகள் அங்கீகரிக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும் நம்மை ஒரு வளர்ந்த சுயசார்புள்ள, மற்றும் சுயபலம் பொருந்திய நாடாகக் காண்பதற்கு இன்னும் நாம் தன்னம்பிக்கையற்றவர்களாகவே இருக்கிறோம்.

எனது மூன்றாவது தொலைநோக்குப் பார்வை **இந்தியாவின் வீறுகொண்ட எழுச்சி** ஆகும். உலகில் இந்தியா வீறுகொண்டு எழுந்து பிரகாசிக்கவில்லையென்றால், ஒருவரும் நம்மை மதிக்கமாட்டார்கள் என்பது என் எண்ணம். **வலிமையுள்ளவர்கள் - வலிமையுள்ளவர்களைத்தான்** மதிப்பார்கள்.

இராணுவ பலம் மட்டுமின்றி, பொருளாதார பலம் பொருந்தியவர்களாகவும் நாம் இருக்க வேண்டியது மிக

அவசியம். இவை இரண்டும் ஒன்றோடொன்று கை கோர்த்துச் செல்ல வேண்டும். மூன்று மாபெரும் மனிதர்களுடன் பணியாற்றியது எனக்குக் கிடைத்த பெரும் பேறு ஆகும். விண்வெளி ஆய்வுத்துறையின் டாக்டர் **விக்ரம் சாராபாய்**. அவருக்கு அடுத்து வந்த டாக்டர் **சதீஸ் தவான்**, மற்றும் அணுசக்தித் துறையின் தந்தை எனப் போற்றப்படும் டாக்டர் **பிரம் பிரகாஷ்** ஆகிய மூவருடன் பணியாற்றியதை உண்மையிலேயே என் வாழ்க்கையின் மாபெரும் தருணங்களாகவே நான் கருதுகிறேன். எனது வாழ்வின் வளர்ச்சியில் **நான்கு மைல் கற்களை** நான் பார்க்கிறேன்.

இந்திய விண்வெளி ஆய்வு மையத்தில் (ISRO) இருபதாண்டுகள் பணியாற்றி உள்ளேன். அப்போது ரோகிணி விண்கலத்தை ஏவிய இந்தியாவின் முதல் செயற்கைக்கோள் SLV3-இன் திட்ட இயக்குனராகப் பணியாற்றும் வாய்ப்பும் கிடைத்தது. ஒரு விஞ்ஞானி என்ற முறையில் இந்த ஆண்டுகள் என் வாழ்க்கையில் மிக முக்கியப் பங்கு வகித்துள்ளன.

இந்திய விண்வெளி ஆய்வு மையப் பணிகளுக்குப் பிறகு (ISRO) பாதுகாப்பு வளர்ச்சி அமைப்பில் (DRDO) இந்தியாவின் பரிசோதிக்கப்பட்ட ஏவுகணைத் திட்டத்தின் ஓர் அங்கமாகப் பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இது எனது இரண்டாவது பேரின்பமாகும். 1994-ஆம் ஆண்டில் அக்னி ஏவுகணைத் திட்டத்திற்கு தேவையான அனைத்து வசதிகளும் கிடைத்த பின்னர், அணுசக்தித் துறையும், பாதுகாப்பு ஆய்வு மற்றும் வளர்ச்சி அமைப்பும் இணைந்த கூட்டு முயற்சியால் மே மாதம் 11, மற்றும் 13-ந்தேதியில் **அணு ஆய்வுச் சோதனை** வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இது நான் அடைந்த மூன்றாவது பேரின்பமாகும்.



இதுபோன்ற அணுவியல் சோதனைகளை எனது சகாக்களுடன் சேர்ந்து நடத்தி அதன் மூலம் இந்தியா ஒரு வளரும் நாடு அல்ல என்றும், அது வளர்ந்த நாடுகளில் ஒன்று என்பதை உலகுக்கு உணர்த்துவதில் எப்போதும் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஒரு இந்தியன் என்ற முறையில் இதைக் குறித்து நான் மிகவும் பெருமைப்படுகிறேன். அக்னி ஏவுகணைக்காக நாம் இப்போது ஒரு புதிய மூலப் பொருளை, எடை குறைந்த கார்பனை வடிவமைத் துள்ளோமே, இது எதற்காக?

ஒரு நாள், ஐதராபாத்திலுள்ள நிஜாம் மருத்துவ அறிவியல் கழகத்தைச் சார்ந்த முடநீக்கு சிகிச்சை நிபுணர் ஒருவர் எனது ஆய்வகத்திற்கு வந்திருந்தார். அவர் அந்தப் பொருளை எடுத்துப் பார்த்துவிட்டு, அது மிகவும் எடை குறைந்து காணப்படுகிறதே என்று கூறி, என்னைத் தன்னுடன் தனது மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அங்குள்ள நோயாளிகளுக்கு என்னை அறிமுகப்படுத்தினார். அங்கு சிறுவர்களும், சிறுமியர்களும், ஒவ்வொன்றும் தலா 3 கிலோ எடையுள்ள உலோகத்தை கட்டிக்கொண்டு கால்களை அங்குமிங்கும் அசைத்துக் கொண்டிருந்தார்கள்.

தனது நோயாளிகளின் வலியைப் போக்குமாறு என்னை அவர் கேட்டுக்கொண்டார். மூன்று வாரத்தில் அவர்களுக்குப் பயன்படும் விதத்தில் அந்தக் காலிப்பர்களின் எடையை 300 கிராமாகக் குறைத்து, அச்சிறுவர்களை முடநீக்கு சிகிச்சை மையத்திற்கு

அழைத்துச் சென்றோம். தங்கள் கண்களையே அவர்களால் நம்ப முடியவில்லை. மூன்று கிலோ எடையைச் சுமந்து கொண்டிருந்த அவர்களால், இப்போது எளிதாக நடக்கமுடிந்தது. அவர்களது பெற்றோர்களின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தோடியதைக் கண்டேன். இது நான் அடைந்த நான்காவது பேரின்பமாகும்.

ஆனால், இங்குள்ள ஊடகங்கள் ஏன் எதிர்மறையாகவே செயல்படுகின்றன? இந்தியர்களாகிய நாம் ஏன் நமது பலங்களையும், சாதனைகளையும் அங்கீகரிக்க மறுக்கிறோம்? இந்தியா அத்தகையதொரு மாபெரும் நாடாகும். வியத்தகு வெற்றிக் கதைகள் இங்கு ஏராளம் உண்டு. ஆனால், அவற்றை ஏற்றுக்கொள்ள நாம் மறுக்கிறோம். இது ஏன்? எதனால்?...

- பால் உற்பத்தியில் உலகில் நாம் முதலிடத்தில் உள்ளோம்.
- செயற்கைக்கோள் மற்றும் தொலைதொடர்பு ஆய்விலும் நாம் உலகில் முதலிடத்தை வகிக்கிறோம்.
- கோதுமை உற்பத்தியில் உலகில் இரண்டாமிடத்தில் நாம் இருக்கிறோம்.
- மேலும் உலக அரிசி உற்பத்தியிலும் நாம் இரண்டாவது இடத்தில் உள்ளோம்.

ஒரு பழங்குடியினர் கிராமத்தை சுயசார்புடைய, சுயமாகச் செயல்படுகின்ற கிராமமாகச் சீர்திருத்தியமைத்துள்ள டாக்டர் **சுதர்ஸனைப்** பாருங்கள்.



இதுபோன்ற சாதனைகள் நம்மிடம் இலட்சக்கணக்கில் உள்ளன.

ஆனால், நமது ஊடகங்கள் எப்பொழுதும் கெட்ட செய்திகள், தோல்விகள் மற்றும் பேரழிவுகளின் மீதே அதிக ஆர்வம் காட்டுகின்றன.

ஒரு சமயம் நான் டெல்அவீவ் நகருக்குச் சென்றிருந்தபோது, இஸ்ரேலியப் பத்திரிகை ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தேன். அது கடுமையான தாக்குதல்களும், குழப்பங்களும், மனித உயிரிழப்புகளும் ஏற்பட்டதற்கு அடுத்த நாள் ஆகும். இக்காட்சிகள் மனதில் நெருடலாய் இருந்தது.

ஆனால் அந்தப் பத்திரிகையின் முதல் பக்கத்தில் பயனற்றுக் கிடந்த ஒரு இடத்தை யூத மனிதர் ஒருவர் ஐந்தாண்டுகளில், எவ்வாறு பழத்தோட்டமாகவும், தானியக் களஞ்சியமாகவும் சீர்திருத்தியமைத்தார் என்பதை படத்துடன் வெளியிட்டிருந்தது. மனதைத் தொடும் இந்தப் படத்தைப் பார்த்து, இந்த அணுகுமுறையைப் பார்த்து நாம் அனைவரும் விழித்தெழ வேண்டும்.

கொலைகள் பற்றிய பயங்கரத் தகவல்கள், ஒருவரையொருவர் தாக்கிக்கொள்வது, மற்றும் அதனால் ஏற்பட்ட எண்ணற்ற மனித உயிரிழப்புகள் ஆகியவை அப்பத்திரிகையின் உள்ளே இருந்தாலும், மற்ற செய்திகளுக்குள் அவை புதைந்துபோயின. இந்தியாவில் நாம் சாவுகள், தீவிரவாதம் மற்றும் குற்றங்கள் குறித்த செய்திகளைத்தான் அதிகம் வாசிக்கிறோம். நாம் ஏன் இவ்வாறு **எதிர்மறையாகவே** இருக்கிறோம்?...

மற்றொரு கேள்வி :

- இந்தியர்களாகிய நாம் ஏன் **அந்நியப் பொருட்களின் மீது மோகம் கொண்டுள்ளோம்?**
- வெளிநாட்டுத் தொலைக்காட்சிகளும், வெளிநாட்டுச் சட்டைகளும் நமக்கெதற்கு?
- அந்நிய நாட்டுத் தொழில்நுட்பங்கள் நமக்கெதற்கு?
- வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப் பட்ட இந்தப் பொருட்களின் மீது நாம் ஏன் ஆசைகொள்ள வேண்டும்? சுயசார்பு மூலமே சுயமரியாதை வரும் என்பதை நாம் ஏன் உணர்வதில்லை?

– இந்தச் சொற்பொழிவை நான் ஐதராபாத் நகரில் ஆற்றிக் கொண்டிருந்தபொழுது, ஒரு 14 வயது சிறுமி என்னிடம் ஆட்டோகிராஃப் கேட்டாள். நான் அந்தச் சிறுமியிடம் ''வாழ்க்கையில் உன் குறிக்கோள் என்ன?'' என்று கேட்டேன். அதற்கு அந்தச் சிறுமி, **"நான் ஒரு வளர்ச்சியடைந்த இந்தியாவில் வாழ விரும்புகிறேன்"** என்று பதில் கூறினாள்.

அவளுக்காகவும், உங்களுக்காகவும், எனக்காகவும் நாம் இந்த வளர்ச்சியடைந்த இந்தியாவைக் தட்டியெழுப்ப வேண்டும். இந்தியா ஒரு வளர்ச்சியடையாத நாடு அல்ல என்பதையும், அது அதிக வளர்ச்சியடைந்த நாடு என்பதையும் நீங்கள் பிரகடனப்படுத்த வேண்டும்.



உங்களை ஒரு சவாலுக்கு அழைத்துச் செல்ல விரும்புகிறேன். நாட்டுக்காக 10 நிமிடம் ஒதுக்கிவிட்டு, பிறகு படியுங்கள் :

- நமது அரசாங்கம் **திறமை இல்லாதது** என்று சொல்கிறீர்கள்.
- நமது நாட்டின் சட்டங்கள் அனைத்தும் மிகப் பழையன என்று நீங்கள் கூறுகிறீர்கள்.
- நகராட்சி குப்பைகளை அகற்றுவதில்லை என்று சொல்கிறீர்கள்.
- தொலைபேசிகள் வேலை செய்யவில்லை என்றும், ரயில்வே துறை ஒரு கேலிக் கூத்தானது என்றும், நமது இந்தியன் ஏர்லைன்ஸ் விமானக் கம்பெனி உலகிலேயே மிகவும் மோசமானது என்றும் நீங்கள் கூறுகிறீர்கள்.
- தபால்கள் உரிய இடங்களுக்கு என்றுமே போய்ச் சேர்வதில்லை என்றும் சொல்கிறீர்கள்.

– இவ்வாறு நீங்கள் சொல்லிக்கொண்டே போகிறீர்கள். ஆனால், இந்த நிலையை மாற்ற நீங்கள் என்ன செய்தீர்கள்?

சிங்கப்பூருக்குச் சென்றுகொண்டிருக்கும் ஒரு மனிதனை எடுத்துக்கொள்ளுங்கள். அவருக்கு ஒரு பெயர் வைத்து, உங்களுக்கு இருப்பதைப் போன்ற ஒரு முகத்தையும் கொடுங்கள். அங்கே விமான நிலையத்தை விட்டு வெளியே வந்தவுடன் நீங்கள் சர்வதேசத் தரத்திற்கு மாறிவிடுவீர்கள்.

சிங்கப்பூரில் நீங்கள் சிகரெட் துண்டுகளைச் சாலைகளில் எறிவதும், கண்ட கடைகளில் எல்லாம் சாப்பிடுவதும் இல்லை. அவர்களைப் போலவே அவர்களுக்கு இருக்கும் வெளியுலகத் தொடர்புகள் பற்றியும் பெருமைப்படுகிறீர்கள். நீங்கள் 5 டாலர்கள் [ரூ.60] கொடுத்து மாலை 5 மணியிலிருந்து 8 மணிவரை ஆர்ச்சார்ட் ரோடு வழியே உங்கள் வாகனத்தை ஓட்டுகிறீர்கள். [இது மாஹிம் சுரங்கப்பாதை அல்லது பெத்தார் ரோட்டுக்கு இணையானது.]

ஒரு பல்பொருள் அங்காடியிலோ, அல்லது உணவகத்திலோ குறிப்பிட்ட நேரத்துக்குமேல் நீங்கள் இருந்திருந்தால், உங்கள் கௌரவம், அந்தஸ்து ஆகியவற்றை விட்டுவிட்டு வாகனங்கள் நிறுத்துமிடத்திற்கு விரைந்து வந்து உங்களது வாகன நிறுத்தும் சீட்டின் அடையாள அட்டையில் துளையிட்டுக்கொள்ள வேண்டும். சிங்கப்பூரில் நீங்கள் எதற்கும் மறுப்புச் சொல்வதில்லை. ஏன்?

**துபாயில்,** ரமலான் நோன்பின் போது உங்களால் பொது இடத்தில் சாப்பிட முடியுமா?

**ஜெட்டா** நகரில் தலைக்கு முக்காடு போடாமல் செல்லும் தைரியம் உங்களுக்குக் கிடையாது.

வேறொருவருடைய STD மற்றும் ISD ஃபோன் கட்டணங்கள் எனது பெயருக்குப் போடப்பட்டுள்ள தென்று, **லண்டனில்** டெலிஃபோன் எக்சேஞ் ஊழியர் ஒருவரை ஒரு மாதத்திற்கு 10 பவுண்டுகள் [ரூ. 650] கொடுத்து வாங்கும் தைரியம் உங்களுக்கு வருமா?...



**வாஷிங்டன்** நகரில் உங்கள் வாகனத்தில் மணிக்கு 55 மைல் வேகத்தில் [88 கி.மீ.] செல்லும் துணிச்சல் உங்களுக்கு வராது.

ஒருவேளை அப்படிச் சென்று டிராஃபிக் போலீஸ் காரரிடம் மாட்டிக்கொண்டால் ''நான் யார் தெரியுமா?'' என்றோ, நான் இன்னாரின் மகன் என்றோ, இந்த ரூபாயை வைத்துக்கொண்டு ஆளை விடுங்கள் என்று சொல்லும் தைரியமும் நமக்கு வருமா?...

**ஆஸ்திரேலியா** மற்றும் **நியூசிலாந்து** கடற்கரைகளில், காலித் தேங்காய் மூடிகளை குப்பைத் தொட்டிகள் தவிர வேறெங்கும் பார்க்க முடியாது.

டோக்கியோ நகரத் தெருக்களில் எச்சில் துப்பிப் பார்ப்பதுதானே?

பாஸ்டன் பல்கலைக் கழகத்தில் பணத்துக்காக ஒருவர் மற்றொருவருக்காகத் தேர்வெழுதும் 'ஜாக்கியையோ' அல்லது போலி மதிப்பெண் சான்றிதழ்களுக்காகவோ முயற்சித்துப் பார்க்கலாமே? நாம் இன்னும் அதே **"உங்களைப்"** பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட நீங்கள்தான் வெளிநாட்டுக் கலாச்சாரத்தை மதிப்பதுடன் அதைப் பின்பற்றவும் செய்கிறீர்கள்.

ஆனால், உங்கள் சொந்த நாட்டில் உங்களால் அவ்வாறு செய்ய முடிவதில்லை, ஏன்?... இந்திய மண்ணை மிதித்தவுடன் பேப்பர்களைக் கசக்கி ரோட்டில் போடுவதையும், சிகரெட் துண்டுகளைச் சாலைகளில் எறிவதையும் செய்கிறோம். ஒரு அந்நிய நாட்டில் பொறுப்புணர்வுடனும், பாராட்டத்தக்க

வகையிலும் நடந்துகொள்ளும் நீங்கள் இந்தியாவிலும் ஏன் அவ்வாறு நடந்துகொள்ளக் கூடாது?...

புகழ்பெற்ற மும்பை நகராட்சி ஆணையாளர் திரு. தினகர் அவர்கள் ஒரு பேட்டியில் கூறியிருந்தார் : ''பணக்கார வீட்டு நாய்கள் தெருவில் அங்கும் இங்கும் திரிந்து தெருவெங்கும் மலம் கழித்துவிடுகின்றன. பிறகு அதே பணக்கார மனிதர்களே அதிகாரிகளின் திறமையின்மையால்தான் நடைபாதைகள் அழுக்கடைந்துள்ளன என்றும் குறை கூறுகின்றனர். ஒவ்வொரு முறையும் அவர்களது நாய்கள் வெளியேற்றும் கழிவுகளைச் சுத்தப்படுத்த ஒரு துடைப்பத்துடன் பின்னால் செல்ல வேண்டுமா?

''அமெரிக்காவில் தனது நாயின் எச்சத்தை அதன் சொந்தக்காரரே துடைத்துச் சுத்தப்படுத்த வேண்டும். ஜப்பானிலும் இப்படித்தான் நடக்கிறது. இந்தியர்களும் இங்கு அதைச் செய்வார்களா?...''

அவர் சொல்வதும் சரிதான். தேர்தல் வரும்பொழுது ஒரு அரசாங்கத்தைத் தேர்ந்தெடுத்துவிட்டு, அத்துடன் நமது கடமைகளை மறந்துவிடுகிறோம்.

நாம் உருப்படியாக ஒன்றுமே செய்யாமல், நமக்குத் தேவையான எல்லாவற்றையும் அரசாங்கமே செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

குப்பை கூளங்களை தெருவெங்கும் போடுவதை நாம் ஒரு நாளும் நிறுத்தப் போவதும் இல்லை, ஒரு சிறு துண்டு காகிதத்தைக்கூட எடுத்துக் குப்பைத் தொட்டியில் போட நாம் முன்வருவதில்லை.



இரயில்வே நிர்வாகம் நமக்குச் சுத்தமான குளியலறை வசதிகள் செய்து தரவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். ஆனால், குளியலறைகளை எவ்வாறு முறையாகப் பராமரிக்க வேண்டும் என்று நமக்குத் தெரியவில்லை.

இந்தியன் ஏர்லைன்ஸ் மற்றும் ஏர்இந்தியா நிறுவனங்கள் நமக்குச் சிறந்த உணவு மற்றும் கழிவறை வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று நாம் விரும்புகிறோம். ஆனால், சிறிய சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தி திருடும் பழக்கத்தை நாம் நிறுத்தப்போவதில்லை.

சம்பளம் வாங்கிக் கொண்டு மக்களுக்குச் சேவை செய்யாத பணியாளர்களுக்கும் இது பொருந்தும். பெண்களின் பிரச்சினைகள், வரதட்சணை கொடுமைகள், பெண் குழந்தைகள் சார்ந்த பிரச்சினைகள் ஆகியவற்றுக்கு வெளியில் பலத்த எதிர்ப்பைக் காட்டும் நாம், வீட்டில் அதற்கு நேர்மாறாக நடந்துகொள்கிறோம்.

அதற்கு நாம் கூறும் நொண்டிச்சாக்கு ''அடிப்படையிலேயே மாற்றம் வரவேண்டும். நான் ஒருவன் மட்டும் என் மகனிடம் வரதட்சனை வாங்கக் கூடாது என்று எப்படிச் சொல்ல முடியும்?'' என்பதாகும்.

எனவே இந்த மாற்றத்தைச் செய்யப் போவது யார்? அதற்கு என்னென்ன தேவை?

இதைச் செய்து முடிக்க நமது அண்டை அயலார்கள், மற்ற குடும்பத்திலுள்ளவர்கள், மற்ற நகரங்களில் வாழ்வோர், இதர சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் மற்றும்

அரசாங்கம் ஆகியவை இருக்கின்றன. **ஆனால், நீங்களும், நானும் அல்ல!**

நம்மால் முடிந்ததைச் செய்தாக வேண்டும் என்ற கட்டாயம் வரும்பொழுது யாராவது ஆபத்பாந்தவனாக வந்து தனது செயற்கரிய செயலைச் செய்துகாட்டும் பொழுது, எப்படியாவது வேலை நடக்கட்டும் என்று நினைத்து நாம் நமது குடும்பத்தினருடன் அந்த இடத்திலிருந்து விலகிச் சென்றுவிடுவோம்...

நமது பய உணர்வே நம்மைச் சோம்பேறிகளாகவும், கோழைகளாகவும் மாற்றிவிட்டதால், அமெரிக்காவுக்கு ஓடிப்போய் அவர்களது வெற்றியில் குளிர்காய்ந்து கொண்டு அவர்களது செயல்களைப் புகழ்ந்து பாராட்டுகின்றோம்.

நியூயார்க்கில் பாதுகாப்பு இல்லையென்றால், நாம் இங்கிலாந்துக்கு ஓடுகின்றோம். இங்கிலாந்தில் வேலையில்லாத திண்டாட்டம் என்றால், அடுத்த விமானத்திலேயே வளைகுடா நாட்டிற்குப் பறந்து விடுவோம்.

வளைகுடா நாட்டில் போர் என்றால் இந்திய அரசு பத்திரமாக நம்மைத் தாயகம் அழைத்துவர வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். நாம் ஒவ்வொருவரும் நமது நாட்டைப் பற்றி அவதூறு பேசுவதிலும், அவமானப்படுத்துவதிலுமே குறியாக இருக்கிறோம். இந்தியாவில் எந்த ஒரு நல்ல திட்டத்திற்கும் உயிர்கொடுக்க நாம் யாரும் முன்வருவதே இல்லை. பணத்திற்காக நமது மனச்சாட்சியை அடமானம் வைத்துவிடுகிறோம்.



என் அன்புக்குரிய இந்தியர்களே! இந்த கட்டுரை உங்களது உயர்ந்த சிந்தனையைத் தூண்டி, உங்கள் மனச்சாட்சியைத் தொட்டு, உங்களுக்குள் மனமாற்றத்தை ஏற்படுத்தும் என்று நான் நம்புகிறேன்.

மறைந்த அமெரிக்க ஜனாதிபதி ஜான்எஃப் கென்னடி அவர்கள் தனது நாட்டு மக்களுக்குச் சொன்னதையே இந்தியர்களாகிய நமக்கும் பொருந்தும் என்று கருதி இங்கே எதிரொலிக்கிறேன் :

''இந்தியாவுக்காக நாம் என்ன செய்ய முடியும் என்றும், அமெரிக்கா மற்றும் இதர மேலை நாடுகள் இன்றுள்ள நிலையை நம் இந்தியா அடைவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? என்றும் நம்மையே நாம் கேட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டும்.''

**"இந்தியாவுக்கு என்ன தேவையோ<br>அதையே நாம் செய்வோம்."**

■■■